கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No.06/2023

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 - ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செல்வராணி | வயது | 60 |
| கணவர் பெயர் | கலியமூர்த்தி | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது சேங்காலிப்புரத்தில் வசித்து வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது வீட்டிற்கு எதிரில் வசிக்கிறார். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு டிசம்பர் மாதம் 22 ம் தேதி நான் வளர்க்கும் நாய்க்குட்டி பக்கத்து வீட்டு பையனின் கையை கடித்துவிட்டது. அதனால் அதனை கட்டி வைக்கும்படி சொன்னார்கள் நான் கட்டி வைத்தேன். அப்போது என் பேத்தி காயத்திரி நாலு வீட்டை தாண்டி போகும்போது ஆஜர் எதிரி சுரேஷ் என் பேத்தியை தகாத வார்த்தைகளால் திட்டினார். ஏன் இப்படி பேசிகிறீர்கள் என்று கேட்டதற்கு சத்தம் போட்டார்கள். நான் அங்கு சென்றேன். அப்போது ஆஜர் எதிரி சுரேஷிடம் ஏன் இப்படி பேசிகிறீர்கள் என்று கேட்டேன். அப்போது எதிரி குடிப்போதையில் கட்டைக்கழி கம்பால் என் பேத்தியை அடிக்க வந்தபோது நான் சென்று தடுத்தேன். அப்போது எதிரி என்னை உதைத்து தள்ளவிட்டதில் எனக்கு வலது பக்க இடுப்பு எலும்பு மூட்டு உடைந்துவிட்டது. அப்போது எனது பேரன் கார்த்திக்கு போன் செய்து தகவல் தெரிவித்தேன். எனது பேரன் ஆஜர் எதிரியிடம் ஏன் இவ்வாறு சண்டை போடுகிறீர்கள் என்று கேட்டுவிட்டு என்னை ஆட்டோவில் குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். குடவாசல் அரசு மருத்துவமனையில் போலிசார் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு நான் 1 1/2 மாதம் சிகிச்சை எடுததுக்கொண்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமுலம்

நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் வாக்குமுலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**.) போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சண்டை நடந்தாக சொல்லப்படும் சம்பவம் எனது பேத்தி காயத்திரி வீட்டிற்கு அருகில் நடந்தது என்றால் சரிதான். காயத்திரியின் விட்டு வாசலில் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 10.00 மணி இருட்டான நேரம் என்றால் சரிதான். நான் இருட்டில் விழும்போது எனது இடுப்பு பகுதியில் கல் குத்திவிட்டது என்றால் சரிதான். எனக்கு உருட்டு கட்டை, முங்கில் கட்டை, மூங்கில் கம்பு ஆகியவற்றுக்கு வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். புகார் வாக்குமூலம் யாரால் கொடுக்கப்பட்டது என்றால் எனது மகள் கவிதாவால் கொடுக்கப்பட்டது. அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதன் பின்னர் போலிசார் என்னை விசாரணை செய்தனரா என்றால் இல்லை. மருத்துவரிடம் நான் என்ன கூறினேன் என்றால் சண்டையில் அடிப்பட்டு விட்டது என்று கூறினேன். ஆஜர் எதிரி நான் வளர்த்த நாய் எல்லோரையும் கடித்ததால் அதனை பார்த்து வைத்துக்கொள்ளும்படி தெரிவித்ததால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளேனா என்றால் சரியல்ல. எனது பேத்திக்கு என்ன நடந்தது என்று பார்ப்பதற்காக ஓடி சென்றபோது இருட்டு நேரம் என்பதால் நான் கால் தடுக்கி கீழே கிடந்த கல்லின் மீது விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி என்னை உதைத்ததின் காரணமாக நான் கல்லின் மீது விழுந்து எனது இடுப்பு எலும்பு உடைந்துவிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும், ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

CC.No.06/2023

2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.2- ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காயத்திரி | வயது | 23 |
| கணவர் பெயர் | கலையரசன் | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடித்தனம் | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

(எதிரி ஆஜரில் உள்ளார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை.)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது சேங்காலிப்புரத்தில் வசித்து வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 எனது பாட்டி ஆவார். 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேதி ஞாபகம் இல்லை. சுமார் இரவு 10.00 மணி இருக்கும். அப்போது எங்கள் வீட்டு நாய் பக்கத்து வீட்டு பையனை கடித்தது தொடர்பாக நான் ஆஜர் எதிரியிடம் கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி என்னை அடிக்க வந்தார். ஆஜர் எதிரி என்னை அடித்து விட்டார். எனது பாட்டி அங்கு வந்தபோது எனது பாட்டியையும் எட்டி உதைத்து விட்டார். அதில் அவர் கீழே விழுந்துவிட்டார். எனது அண்ணன் கார்த்திக்கேயனுக்கு போன் செய்து வரவழைத்தோம். அப்போதும் ஆஜர் எதிரி சுவர் ஏறிக்குதித்து என்னை அடிக்கவந்தார். அதன் பின்னர் பாட்டியை குடவாசல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதன் பின்னர் பாட்டியை திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை அடித்தார்கள் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் வெளியே வந்து பார்த்தபோது எனது பாட்டி கீழே கிடந்தார் என்றால் சரிதான். என்னை தாக்கியதில் எனக்கு காயம் ஏற்பட்டதா என்றால் உள்காயம் ஏற்பட்டது. அதற்காக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நாங்கள் குடவாசல் அரசு மருத்துவமனையில்

இருக்கும்போது போலிசார் விசாரணை செய்தனாரா என்றால் இல்லை. சம்பவம் இரவு நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். எனக்கு என்ன ஆனதோ என்ற பயத்தில் எனது பாட்டி ஓடிவந்தபோது இருட்டில் கால் தடுக்கி கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் ஆஜர் எதிரி எனது பாட்டியை மூங்கில் கட்டையால் இடுப்பில் அடித்துவிட்டார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் உண்மையல்ல என்பதால் தான் பாட்டியை காலால் உதைத்ததாகவும், மூங்கில் கட்டையால் அடித்ததாகவும், மாற்றி மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி நாங்கள் வளர்க்கும் நாய் மற்றவர்களை கடித்துவிட்டதாகவும், அதனால் அதனை கட்டி வைக்குமாறு கூறியதால் ஏற்பட்ட காழ்புணர்ச்சி காரணமாக ஆஜர் எதிரியின் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வயது முதிர்வின் காரணமாகவும், இருட்டில் தடுமாறி விழுந்ததின் காரணமாக ஏற்பட்ட காயத்தை எதிரி தாக்கியதால் ஏற்பட்ட காயம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாட்டிற்கு ஏற்பட்ட காயத்திற்கும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur.